சீவல்சரகு ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திருமதி.ரா.ராணி,

நாள் : 15 .04.2024

ந.க.எண்: 02/2024/சீ.ஊ

பொருள் : மனைப்பிரிவு அங்கிகரித்தல் - ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம் - சீவல்சரகு ஊராட்சி - நில அளவு எண் 627/1A1B, 281-ல் 1.386 ஏக்கர் (5610 ச.மீ.) பரப்பளவு இடத்தில் 30 மனைகளாக பிரிக்கப்பட்டு துணை இயக்குநர் நகர் ஊரமைப்பு துறை திண்டுக்கல் - தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மனைகளை அங்கிகரித்து உத்தரவிடுதல் - தொடர்பாக.

பார்வை :
1) திருமதி.சே.ஸ்ரீதேவி, விண்ணப்ப நாள் : 02.04.2024.
2) துணை இயக்குநர், மாவட்ட ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல் ந.க.எண்: 7UBSF3GD/2024/TCP1, (Road Pattern Issued on) நாள்: 11.03.2024.
3) இணை இயக்குநர் வேளாண் துறை, திண்டுக்கல் கடிதம் எண்.மதி.4/9523/2023, நாள் : 27.09.2023.
4) நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19799/2020/பொ, நாள் : 24.12.2020.
5) அரசாணை நிலை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் : 04.06.2004.
6) அரசாணை நிலை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் : 04.05.2017.
7) அரசாணை நிலை எண்.18, நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் ந.நீ(1) துறை நாள் : 04.02.2019.
8) அரசாணை நிலை எண்.16, நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் ந.நீ(1) துறை நாள் : 31.01.2020.
9) ஆணையர், நகர் ஊரமைப்பு, சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:13753/2018/எல்.ஏ.2 நாள்: 16.08.2018.
10) அரசாணை நிலை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை UD.4(3), நாள் : 23.09.2020.
11) அரசாணை நிலை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை UD.4(1), நாள் : 09.12.2020.
12) அரசு கடிதம் எண்.19113/ந.வ.4(3)/2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள் : 30.08.2017.
13) ஆணையர், நகர் ஊரமைப்பு, சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:13686/2017/எல்.ஏ.2 நாள்: 08.09.2017.
14) சென்னை நகர் ஊர்மைப்பு மற்றும் திட்டக்குழுமம் சுற்றறிக்கை ந.க.எண்.320/2022/TCP3, நாள் : 07.01.2022.

15) சென்னை நகர் ஊர்மைப்பு மற்றும் திட்டக்குழுமம் சுற்றறிக்கை ந.க.எண்.4367/2019/TCP2, நாள் : 14.10.2019.
16) துணை இயக்குநர், மாவட்ட ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல் ந.க.எண்: 7UBSF3GD/2024/TCP1, நாள்: 01.04.2024 (SWP/DTCP dindigul/ Layout No. 56/2024.

உத்தரவு: திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், சீவல்சரகு ஊராட்சி / வருவாய் கிராம புல எண். 627/1A1B, 281-ல் 1.386 ஏக்கர் (5610 ச.மீ) பரப்பளவு இடத்தில் 30 பிரிக்கப்பட்டு பார்வை 16-ல் கண்டவாறு ஒப்புதல் வரப்பெற்றது. அதனைத் தொடர்ந்து 30 மனைகளுக்கு (1.386 ஏக்கர்) அரசு தலைப்பில் மனுதாரர் செலுத்த வேண்டிய கூட்டணங்களை இணைதளம் மூலம் செலுத்தப்பட்டு விட்டது. எனவே, கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு 30 மனைகளை வீட்டு மனைகளாக அங்கிகரித்து இதன் வழி உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்புத்துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலையின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மனையினை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணம் கொண்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
2. ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கு வியாபிக்கின்ற வகையில் ஊராட்சி பகுதிக்கு குறைந்தது 3 மீட்டர் அளவுள்ள திறந்த வெளி இருத்தல் வேண்டும். இந்த பின்பக்க திறந்தவெளியில் கிணறுகள், கழிப்பறை, எருக்குழி, மாட்டுத்தொழுவம், கார்செட், கொட்டகை போன்ற குடியிருப்பு அல்லாத ஆனால் அதைச்சார்ந்த கட்டிடம் மற்றும் அமைக்கப்பட வேண்டும். ஆனால் கட்டிடங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையில் நீளத்தில் மூன்றில் ஒருபாகத்திற்கு மேற்படாமலும் மனையின்பின்பக்க நிலமட்டத்திலிருந்து 3 மீட்டர் உயரத்திற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
3. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை பெருமட்டத்திற்கு உயர்த்த வேண்டும்.
4. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்களுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளதுபோல் உட்பிரிவு செய்யப்பட வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும்.
5. விற்பனைக்கு உண்டான மனைகளை விற்பனை செய்யும்பொது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகலினை மனையினை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்படவேண்டும்.

6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவின் நுழைவுவாயிலில் 6 X 4 அளவிலான நிரந்தர தகவல் பலகையின் மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக வைக்கப்பட வேண்டும்.

இணைப்பு : அங்கீகரிக்கப்பட்ட வரைபட - பிரதிகள்

15/4/24

தலைவர்,
சீவல்சரகு ஊராட்சி,
ஊராட்சி மன்றம்,
சீவல்சரகு ஊராட்சி,
ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர்:-

திருமதி.சே.ஸ்ரீதேவி,
24து/1, பழைய குயவர்பாளையம் ரோடு,
முனிசாலை நகரம்,
மதுரை தெற்கு.

நகல் : சார்பதிவாளர், சின்னாளப்பட்டி.